## *DEPOSITION OF WITNESS*
## IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, THANJAVUR AT KUMBAKONAM

### SC No. 232/2023

**PW: 13**

| | | | |
|---|---|---|---|
| Name : | திரு.ரவீந்திரன் | Taluk : | கும்பகோணம் |
| Father's Name : | திரு.ஜெயபால் | Calling : | LW8 |
| Village : | தேனாம்படுகை | | 38 |

Solemnly affirmed by Thiru.X.Gilbert Maria Julian, Bench Clerk Grade II in accordance with the provisions of The Oaths Act, 1969 (Act 44 of 1969) on the 19th day of May 2026.

Signature of Witness.

(A1, A3 present. A2, A4 absent. Petition filed and allowed. Assistant Public Prosecutor Grade I Present. Defence counsel present)

முதல் விசாரணை :

நான் தேனாம்படுகையில் வசித்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி கையொப்பத்தினை 5 வருடங்களுக்கு முன்பாக 9 வது மாதம் 18 ம் தேதி பகல் 3.00 மணிக்கு சண்டை நடந்த இடமான தேனாம்படுகை வடக்கு தெருவில் கையொப்பம் செய்தேன். பட்டீஸ்வரம் போலீசார் ஜெயக்குமாருக்கும் ராஜ்குமாருக்கும் இடையே நடந்த சம்பவம் தொடர்பாக அங்கு வந்து வரைபடம் வரைந்தார்கள், என்னிடம் சாட்சி கையொப்பம் பெற்றார்கள். என்னுடன் பக்கத்து தெருவை சேர்ந்த வீரபெருமாள் என்பவரும் கையொப்பம்

செய்தார். பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.10 ஆகும். பார்வை மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. என்னை போலீசார் விசாரிக்கவில்லை.

எதிரிகள் தரப்பு பொதுவான குறுக்கு விசாரணை :

2) போலீசார் கையொப்பம் போட சொன்னதால் கையொப்பம் செய்து கொடுத்தேன். இந்த வழக்கு பிரச்சனை சம்மந்தமாக எனக்கு எதுவும் நேரடியாக தெரியாது என்றால் சரிதான். சாட்சிய சம்மனில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். சாட்சி சம்மனில் உள்ள கையொப்பத்திற்கும் பார்வை மகஜரில் உள்ள கையொப்பத்திற்கும் வேறுபாடு உள்ளது என்றால் சரிதான், சில நேரங்களில் அப்படி கையொப்பம் செய்வேன். பார்வை மகஜரில் உள்ள விவரங்களை எழுதியது யார் என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் சரிதான். போலீசாரிடம் ஒரு கையொப்பம் தான் செய்தேன்.

3) வீரபெருமாளும் ஒரு கையொப்பம் செய்தாரா என்றால் அவர் எத்தனை கையொப்பம் செய்தார் அவர் எங்கு கையொப்பம் செய்தார் என்று நான் பார்க்கவில்லை. இந்த வழக்கில் என்னை சாட்சியமாக சேர்க்கப்பட்ட விவரமே எனக்கு தெரியாது என்றாலும், தற்போது போலீசார் சாட்சிய சம்மன் என்னிடம் கொடுத்ததின் அடிப்படையில் போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க முன்விசாரணையில் சொல்லியுள்ள விவரங்களை சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம்

**என்னுடையது அல்ல என்று சொன்னால் சரியல்ல.**

**<u>மறு விசாரணை</u> இல்லை.**

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him to be Correct.*

*Sd/S.Mahalakshmi,*
*Chief Judicial Magistrate,*
*Thanjavur at Kumbakonam.*